அசல் வழக்கு எண். **478 /2018**, பி. வா.சா.**1**, கவிதா, க/பெ. ஜெய்சங்கர்

தேதி **18.04.2024**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> **:**

வாதி கண்ணகி எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி கண்ணகி பாகம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி கனகம்பாள் 3 ஆம் பிரதிவாதி கவிதா பெயருக்கு 12.05.2008 ஆம் தேதி ஒரு இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தினை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் 3 ஆம் பிரதிவாதி கவிதாவிடம் சொத்தினை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். 12.05.2008 ஆம் தேதியிட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தில் கலைச்செல்வி, கிருஷ்ணகுமார் மற்றும் வாதி கண்ணகி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் கண்ணகி மட்டும் கையொப்பம் செய்யவில்லை.

2) 12.05.2008 ஆம் தேதியிட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தில் எனது கணவர் ரெங்கநாதன் அனுபவித்து வந்து அவர் இறந்தபிறகு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு நான்(கனகம்பாள்) அனுபவம் செய்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரெங்கநாதன், கனகம்பாள் தம்பதியினருக்கு வாரிசுகளாக கலைசெல்வி, கவிதா, கிருஷ்ணகுமார் ஆகியோர் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வாதியின் தந்தை ரெங்கநாதன் அவருடைய சகோதரர்கள் தங்கராசு, செல்வராசு ஆகியோருக்கிடையே பாகம் பிரித்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தந்தை ரெங்கநாதன் அவருடைய சகோதரர்கள் தங்கராசு, செல்வராசு ஆகியோருக்கிடையே பாக முச்சலிக்கா ஒன்று 30.08.1984 அன்று ஏற்படுத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3) மேற்படி பாகப்பிரிவினையில் உட்படுத்தப்பட்ட சொத்து வாதியின் தந்தை ரெங்கநாதன், ரெங்கநாதனின் மனைவி கனகம்பாள் பெயரில் வாங்கப்பட்ட பொது குடும்ப சொத்துகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை பொறுத்து 1 ஆம் பிரதிவாதி கனகம்பாள் 3 ஆம் பிரதிவாதி கவிதாவிற்கு மட்டும் இனாம் செட்டில்மென்ட் எழுதிக்கொடுக்க எந்தவித உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் வாதி கண்ணகிக்கு பாகம் உள்ள சொத்துகள் என்றால் சரியல்ல. நான் கிரயம்

வாங்கியதாக சொல்லும் சொத்தினை ஒருபோதும் நான் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. அதில் மரங்கள் வைத்து அனுபவம் செய்து வருகிறேன்.

4) வழக்கு சொத்தினை வாதி கண்ணகி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கனகம்பாளுக்கு மட்டுமே வழக்கு சொத்து பாத்தியமானது என்பதுபோல் எழுதப்பட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணம் செல்லாது என்றாலும், அந்த இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் நான் கிரயம் வாங்கியதும் செல்லாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு கிடைக்கவேண்டிய பாகத்தினை மோசடி செய்வதற்காக நானும் 1 ஆம் பிரதிவாதி கனகம்பாளும் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள ஆவணங்கள் மோசடியானவை என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஆவணம் வாதியின் பாகத்தை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

5) வழக்கு சொத்துகளில் வாதி கண்ணகிக்கு சரிபாதி கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நான் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றாலும் எனக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி கனகம்பாள் பெயரில் வழங்கப்பட்ட சொத்து அவருடைய வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து அல்ல என்றாலும், அது கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல.